**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 109/2024**

**வாதி தரப்பு சாட்சி–1 வேலுச்சாமி – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 15.09.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1)எனது வழக்குரையில் உள்ள சங்கதியும், நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதியும் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 664/8 ஆகும். நான் தாவா சொத்தான சர்வே எண் 664/8 ன் மொத்த விஸ்தீரணத்தை பற்றி வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாவா சொத்தி விபரத்தில் 0.01.0 ஏர்ஸ் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என் வீட்டிற்கு எதிரே தென்வடல் ரோடு உள்ளதா என்றால், கிழமேலாக ரோடு உள்ளது. எனது வீட்டிற் வாசல்படி எந்த திசையை நோக்கி உள்ளது என்றால், கிழக்குபுற வாசல்படி. எனது வீட்டில் இருந்து முன்புறம் உள்ள வாசலை பாதையாக பயன்படுத்திதான் ரோட்டிற்கு வரவேண்டும் என்றால் சரிதான். மேற்படி பாதைக்கு கிழபுறம்தான் பிரதிவாதிகளின் வீடு உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் வீடு உள்ள பகுதியின் சர்வே எண் வேறு என்றால் சரிதான்.

2) பிரதிவாதிகள் வீட்டிற்கு பின்புறம் எனது வீட்டின் வாசல் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் வாசலைத்தான் பிரதிவாதிகள் பாதையாக அவர்கள் தாத்தா காலம் முதல் பயன்படுத்தி வந்தார்கள், அதை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் சுமார் 20 வருடங்கள் இருக்கும். எனது தகப்பனார் இறக்கும் வரையிலும் பிரதிவாதிகள் வெளியூருக்கு வேலைக்கு செல்லும் வரையிலும் எங்களுக்குள் எந்த பிரச்சினையும் இல்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் உயிரோடு இருக்கும்வரை எங்களுக்குள் இருந்த நட்பின் காரணமாக எனது வாசலை பாதையாக பயன்படுத்த எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை என்றும்,

தற்போது எங்களுக்குள் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக பிரதிவாதிகளின் சுவாதீனத்தில் இடையூறு செய்கிறோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள்தான் எங்கள் நிலத்தை சிறிது சிறிதாக ஆக்கிரமிப்பு செய்து இடையூறு செய்து வருகிறார்கள். வருவாய்துறை ஆவணத்தில் சர்வே எண் 664/8 ல் 1 ஏர்ஸை தவிர மீதி உள்ள இடம் காலி இடமாக உள்ளது என்றால் சரிதான், நான்தான் அனுபவம் செய்து வருகிறேன்.

3) பிரதிவாதிகளின் வீடு கிழக்கு பார்த்த வாசல்படி என்றால் சரிதான். பிரதிவாதிகளின் வீட்டின் மேற்குபுறம் சிமெண்ட் ரோடு வரை கம்பிவேலி போடப்பட்டுள்ளதா என்றால், சரியாக தெரியவில்லை. நான் தற்போது வரை தாவா சொத்தில்தான் வசிக்கிறேனா என்றால் ஆமாம். எனக்கு மேற்படி விபரங்கள் தெரியும் என்றும், அதனை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் பிரதிவாதிகளுக்கு எதிராக கொடுத்த புகாரில் பிரதிவாதிகள் வேலை போட்டும் விபரத்தை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகளும் எனக்கு எதிராக புகார் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். பிரதிவாதிகளின் வீட்டிற்கு பின்புறம் உள்ள வேலியைப் பற்றி வா.சா.ஆ.5 மாதிரி வரைபடத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது வீட்டிற்கு முன்புறம் உள்ள பாதை பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்டது என்றும், அதை மறைத்து பொய்யாக வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல.

4) பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரை விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது சாட்சிய வாக்குமூலத்தில் பிரதிவாதிகளின் பதிலுரை சங்கதிகளை ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 பட்டா யார் பெயரில் உள்ளது என்றால், எனது மனைவி அஞ்சலை பெயரில் உள்ளது. வா.சா.ஆ.2 மற்றும் 3 எனது மனைவி பெயரில் இல்லை என்றால் எனது தகப்பனார் பெயரில் உள்ளது. வீட்டு வரி ரசீது ராசு என்பவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் தாவா சொத்தின்

சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 தாவா சொத்திற்கு உரியது அல்ல என்றால் சரியல்ல. 23.07.2020 ம் தேதி 2ம் வாதி பிரதிவாதிகளுக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் 2 ம் வாதி தாவா சொத்து தனக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் பெயர் ராசு என்றால் சரிதான், எனது தாய்மாமன் பெயரும் ராசு என்றால் சரிதான்.

5) இரண்டு நபர்களின் பெயரும் ஒன்றாக இருப்பதை பயன்படுத்தி நான் தவறாக வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 வீட்டுவரி ரசீது எந்த ராசுவுக்கு உரியது என்பது குறித்து நிரூபிக்க கூடுதல் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2, 3, 5 ஆகியவை தாவா சொத்திற்கு உரியவை அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அனுபவம் செய்து வரும் நிலத்தை நான்தான் அவர்களுக்கு இடையூறு செய்து வருகிறேன் என்றும், பிரதிவாதிகள் என்போதும் எனது அனுபவத்திற்கு இடையூறு செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பயன்படுத்தி வரும் பாதையை அபகரிக்கும் எண்ணத்தில் நான் பொய்யாக வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகாததால் நான் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**
**Kulithalai.**